## இங்கிலாந்து நாட்டிலுள்ள ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்த தந்தை பெரியாரின் திருவுருவப் படம்!

### ‘இந்தியா டுடே’ புகழாரம்!

**சென்னை, செப். 7-**

**இங்கிலாந்து நாட்டிலுள்ள ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் தந்தை பெரியாரின் திருவுருவப் படத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்ததையொட்டி ‘பெரியார் தத்துவத்தை உலகளாவிய ஆர்வத்தை சுட்டிக்காட்டும் ஒரு தனி முத்திரை’ என்று ‘இந்தியா டுடே’ புகழாரம் சூட்டியுள்ளது.**




இதுகுறித்து 'இந்தியா டுடே' இணைய தள வீடியோவில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் சவுண்ட் ஆண்டனிஸ் கல்லூரியில் சமூக சீர்திருத்தக் குரு தந்தை பெரியார் அவர்களின் உருவப்படத்தை திறந்து வைத்தார்.

இது சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழாவின் முக்கிய நிகழ்வாகும்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

“அறிவியல், மனித உரிமை, மரியாதை என்பவற்றின் சின்னமாகும் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் பெரியாரின் உருவப் படத்தை திறந்துவைப்பது என் வாழ்நாள் பெருமிதமாகும். இது பெரியாரின் தார்க்கீக ஒளி உலகத்துக்கெல்லாம் பரவிக்கொண்டிருக்கிறது என்பதைச் சாட்சியமாக்குகிறது.”

“சுயமரியாதை இயக்கம் - ஒரு புரட்சியே பிறந்தது! சங்கிலிகள் விழுந்தன, கௌரவம் உயர்ந்தது. தந்தை பெரியார் சீற்றங்களை உடைத்து, அறிவுத்திறனை வளர்த்து, சமூக மாற்றத்தின் பாதையை வழிநடத்தினார்.”

“மெய்ப்பொருள் வழியில் நான் பெரியாரின் மரபின் வாரிசாய் இருப்பதாக பெருமையுடன் சொல்கிறேன்” என்றும் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் “The Cambridge Companion to Periyar” எனும் நூல் வெளியிடப்பட்டது,

இது பெரியார் தத்துவத்தின் உலகளாவிய ஆர்வத்தை சுட்டிக்காட்டும் ஒரு தனி முத்திரையாகும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஒன்றியம் மயிலம் ஊராட்சியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம் முகாமில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து வரப்பட்ட கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு,கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகத்தினை வழங்கினார்.உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன்,தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்டநிர்வாகிகள்,துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## முதலமைச்சரின் இங்கிலாந்து பயணத்தில்

# பல்வேறு துறைகளில் கோடிக்கணக்கில் முதலீடுகள் ஒப்பந்தம்!

### ‘சன் நியூஸ்’ தொலைக்காட்சியின் சிறப்பு செய்தி!

சென்னை, செப். 7–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஜெர்மனி, இங்கிலாந்து பயணம் மேற்கொண்ட நிகழ்வு குறித்து சன் நியூஸ் தொலைக்காட்சி வெளியிட்டுள்ள சிறப்புச் செய்தி வருமாறு:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இங்கிலாந்து பயணத்தின் முதல் நாளில் கப்பல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, ஜவுளி உள்ளிட்ட துறைகளில் 820 கோடி ரூபாய் அளவிற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஐரோப்பா பயணத்தில் இரண்டாம் கட்டமாக இங்கிலாந்தின், லண்டன் நகருக்குச் சென்றுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களின் உயர் அலுவலர்களைச் சந்தித்தார். அந்த வகையில் உலகின் முன்னணி விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் நுட்ப நிறுவனங்களில் ஒன்றான ரோல்ஸ் ராய்ஸ் நிர்வாகிகளைச் சந்தித்தது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.




அப்போது ஓசூர் ரோல்ஸ் ராய்ஸ் செயல்பாட்டை விரிவுபடுத்துவதில் அந் நிறுவனம் தமது வலுவான ஆர்வத்தை வெளிப்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாட்டில் கப்பல் கட்டுதல், துறைமுகம் மேலாண்மை மற்றும் கடல் சார் தொழில் நுட்பத்தில் புதியதாக 200 வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில், சென்னையில் லாயிட்ஸ் திறன் மையத்தை விரிவுபடுத்த முதலமைச்சர் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதே போல் வில்சன் பவர் நிறுவனம் தமிழ்நாட்டில் புதிய மின்சாரம் மின்மாற்றி உற்பத்தி மையத்தை நிறுவிட 300 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 543 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையிலும் இங்கிலாந்தை தலைமையிடமாகக் கொண்ட பிரிட்டானியா ஆடை ஏற்றுமதி நிறுவனம் மூலம் திருப்பூர், நாமக்கல்லில் 520 கோடி ரூபாய் முதலீடு செய்யும் வகையிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தம் மூலம் ஆடைத் துறையில் விநியோகச் சங்கிலி டிஜிட்டல் மயமாகும் என அரசு தெரிவித்துள்ளது.

கோவையில் வடிவமைப்பு சார்ந்த உயர்கல்வி நிறுவனத்தைத் தொடங்க Ecole intuit lab நிறுவனத்தோடு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதோடு கல்வி ஒத்துழைப்பை எக்ஸ்டெர் பல்கலைக் கழகம் தமிழ்நாட்டு டன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டதாக அரசு குறிப்பிட்டுள்ளது.

இந்த சிறப்பு மிக்க ஒப்பந்தங்கள் துறை ரீதியான ஒத்துழைப்பை மேம்படுத்தவும் உயர் தர சர்வதேச முதலீடுகளை ஈர்க்கவும் இந்தியா – இங்கிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை பயன்படுத்திக் கொள்வதற்கான உறுதியான எடுத்துக்காட்டுகளில் ஒன்று என்றும் அரசு தெரிவித்துள்ளது.

இவ்வாறு ‘சன் நியூஸ்’ தொலைக்காட்சி சிறப்பு செய்தியை வெளியிட்டுள்ளது.

## பெரியார் விருது பெறும் கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு பாராட்டு!

# முதல்வர் தலைமையிலான கழக அரசின் சாதனைகளை மகளிரிடம் கொண்டு செல்வோம்!

### தி.மு.க. மகளிர் அணி – மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை, செப். 7 -*

தி.மு.க. மாநில மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, பிரச்சார குழு செயலாளர்கள், வலைதள பொறுப்பாளர்கள், ஆலோசனை குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் 4.9.2025 அன்று மாலை 4.00 மணி அளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பன் தலைமையில் மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் பஇராணி, மகளிரணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாநில நிர்வாகிகள் அங்கயற்கண்ணி, சேலம் சுஜாதா, ரேகா பிரியதர்ஷினி, அமலு விஜயன், ராணி ரவிச்சந்திரன், விஜிலா சத்தியானந்த், யாழினி, ரத்னா லோகேஸ்வரன், வாசுகி ரமணன், தேன்மொழி, சத்யா பழனிக்குமார், டாக்டர் மாலதி, மாலதி நாகராஜ், ரியா, உமா மகேஸ்வரி ஆகியோர்கலந்துகொண்டனர்.

அதுபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

“இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்” என்றார் வான்புகழ் வள்ளுவர்,

அதற்கொப்ப, யார் யாருக்கு எது பொருத்தம், எவருக்கு ஒரு பொறுப்பினைத் தந்தால், அதைச் செவ்வனே நிறைவேற்றுவார் என பகுத்தறிந்து பார்த்து முடிவு செய்யும் ஆற்றலுக்குச் சொந்தக்காரர் நம்முடைய திராவிடல் மாடல் அரசின் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். அந்த வகையில், முத்தமிழறிஞர் கலைஞரின் முத்தான மகள் கனிமொழியை, கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராக்கி, கழக மகளிர் அணிக்கு பெருமை சேர்த்தார் நம் கழகத் தலைவர். அது மட்டுமின்றி, துணைப் பொதுச்செயலாளர் ஆனாலும், தொடர்ந்து மகளிர் அணியை வழிநடத்தும் பொறுப்பினையும் தந்தார்.

இப்பொழுதோ, அனைத்துக்கும் மேலாக “பெரியார் விருதினை” இந்த முப்பெரும் விழாவில் கனிமொழிக்கு என்று அறிவித்திருக்கிறார். கனிமொழியைப் பற்றி நன்கு அறிந்தவர்களுக்குத் தெரியும். அவர் மேடையில் பேசும்போது மட்டுமல்ல, மேடையை விட்டு கீழே இறங்கினாலும், அவர் நூற்றுக்கு நூறு பெரியாரை பின்பற்றுபவர் என்பது. இதை நன்கு அறிந்த காரணத்தால்தான், தன் தங்கை கனிமொழிக்கு “பெரியார் விருது” என அறிவித்து பெருமை சேர்த்திருக்கிறார் நம் கழகத் தலைவர் முதுலாமைச்சர் அவர்கள். அவருக்கு மகளிர் அணி சார்பில் உளமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று சென்னை - நாளை தூத்துக்குடி - அதற்கடுத்த நாள் டெல்லி இதற்கிடையில் பல்வேறு ஊர்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் என ஓயாமல் சுற்றிச் சுழன்று ஆற்றிக் கொண்டிருக்கும் கழகப் பணிகள், இலக்கியப் பணிகள், சமூகப் பணிகள் என ஓயாத உழைப்பு.

தமிழர்களின் உரிமைகளுக்காக நாடாளுமன்றத்தில் கர்ஜனை. அதேநேரம் இந்திய எல்லையில் பஹல்காமில் தீவிரவாதிகளின் தாக்குதல் குறித்து, இந்தியாவின் நிலைப்பாட்டை வெளிநாட்டவர்க்கு விளக்க இந்தியப் பிரதிநிதியாக பல நாடுகளுக்குப் பயணம், தன் தூத்துக்குடி தொகுதியில் விமான நிலையத்தின் விரிவாக்கம், தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைவதற்கு பல்லாண்டு காலமாக தொடர்ந்து குரல் கொடுத்து வந்ததன் காரணமாக, தற்போது செயல் வடிவம் பெற்றுள்ளது.

வரலாறு காணாத வெள்ளம் தூத்துக்குடியை சூழ்ந்த நேரத்தில், தன் உயிரையும் பொருட்படுத்தாது, களத்தில் இறங்கி மக்களைக் காத்த தாயுள்ளம் கொண்டவர். சமூக நீதி, பெண்ணுரிமை போன்ற தலையாயப் பிரச்சினைகளுக்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பவர்.

தன்னுடைய தூத்துக்குடி தொகுதியில் அரும்பெரும் முயற்சியால் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக தூத்துக்குடியில் வின்பாஸ்ட் மின்சார கார் உற்பத்தி ஆலை தமிழ்நாடு முதமைச்சர் அவர்களால் சமீபத்தில் துவக்கி வைக்கப்பட்டது குறிப்பிடத் தக்கவையாகும்.

வருகிற செப்டம்பர்17 அன்று கரூரில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவில் “பெரியார் விருது” பெறும் கழக துணைப் பொதுச்செயலாளர் - நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்களுக்கு தி.மு.க. மகளிர் அணி தனது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்வதோடு, மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான கழக அரசு செய்துள்ள சாதனைகள் எண்ணிலடங்கா. அதிலும், குறிப்பாக மகளிருக்காக கழக ஆட்சி செய்திருக்கும் சாதனைகள் பலப்பல. குறிப்பாக சிலவற்றை சொல்வதெனில்,

1) மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூபாய் ஆயிரம்.

2) மகளிருக்கு இலவச பேருந்து பயணம்

3) பணிபுரியும் மகளிர் தங்க “தோழி” விடுதிகள்.

4) தமிழகம் முழுவதும் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச காலை சிற்றுண்டி

5) மூத்த மகளிர்க்கு இல்லம் தேடிச் சென்று ரேஷன் பொருட்கள் வழங்குதல்.

6) பெண்கள் உயர்கல்விக்காக மாதம் ரூ.1000/-

இவற்றையெல்லாம் தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிர் ஒவ்வொருவர் இடத்திலும் கொண்டு சேர்ப்பதோடு, கழக அரசுக்கு மகளிரின் மேலான ஆதரவைத்திரட்ட வேண்டும்.

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலையொட்டி நம் திராவிட மாடல் அரசின் நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் மகளிருக்காக செய்துள்ள சாதனைகள் அவர்களிடம் கொண்டு சேர்ப்பதில் தி.மு.க. மகளிர் அணியின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இவற்றையெல்லாம் மனதில் நிறுத்தி, நம் மகளிர் அணி நிர்வாகிகள் செயலாற்றி, மீண்டும் கழக ஆட்சி மலர்ந்து இரண்டாவது முறையாக கழகத் தலைவர் தளபதி அவர்களின் முதலமைச்சராக்க பாடுபட உறுதியேற்போம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் பி.சேகர் தலைமையில் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள.புகழேந்தி, திண்டிவனம் ஜாஃபர் அலி ஆகியோர் முன்னிலையில் நாளை (08.09.2025 - திங்கட்கிழமை) மாலை 4.00 மணி அளவில், செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மண்டலப் பொறுப்பாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி, நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

1. செப்டம்பர் 15 ல் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக,

2. செப்டம்பர் 17ல் கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் கலந்து கொள்வது சம்பந்தமாக,

3. வாக்குச்சாவடி முகவர் சரிபார்த்தல் (BLA2), (BLC),

4. கழக ஆக்கப் பணிகள்.

**செஞ்சி கே.எஸ்.மஸ்தான், எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



விழுப்புரம் மத்திய மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நேர்காணல், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் சி.பிரதீப் நேர்காணலை நடத்தினார். விழுப்புரம் தொகுதி பார்வையாளர் துரை.கி.சரவணன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் புகழ்.செல்வகுமார், மாவட்ட துணை அமைப்பாளர்கள் குமரன், கிருஷ்ணமூர்த்தி, கோபிநாத், பிரசாத் மாரிமுத்து, வெங்கடேசன், திருமுருகன், ரீகன் ராஜ் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மூன்று புதிய நகர பேருந்துகளை மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு புதிய பேருந்துகளை கொடி அசைத்து, பேருந்து இயக்கி வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், ஆம்பூர் கிழக்கு நகர பொறுப்பாளர் எஸ்.எம். ஷபீர்அஹமத், மாதனூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் க.இராமமூர்த்தி, ஆம்பூர் நகர மன்ற தலைவர் ஏஜாஸ்அகமது, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் மு.பழனி, நகர இளைஞரணி அமைப்பாளர் சரண்ராஜ் நகர மாணவரணி அமைப்பாளர் கார்த்திக் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.